உ

திருவருட்சகாயம்.

கன்னியாகுமரிப் பகவதி அந்தாதிமாலை.

இஃது திருக்குருகூர்

ஸ்ரீமத் ஞானசித்தசுவாமிகள்

திருவாய்மலர்ந்தருள

இந்நூலாசிரியர் சகோதரி குமாரனும்
ஆத்மசீடனுமாகிய
ஆயுர்வேதபண்டிதம் குலசேகரன்பட்டணம்

சங்கரன்

அந்நகர் தர்மாபிமானச்செல்வர்கள்
பொருளுதவியைக்கொண்டு

ஸ்ரீவைகுண்டம்
ஸ்ரீ கான வித்யா பிரஸில்
பதிப்பிக்கப்பட்டது.

1936.

தாது ௵ ஆடி ௴

OFFICE OF THE ...
7 - JAN 193..
MADRAS

இரண்டாம் பதிப்பு

காப்பிகள்—1000



ஸ்ரீமத் ஞானசித்தசுவாமிகள்.

உ

திருவருட்சகாயம்.

சித்தாராதீனகர்த்தர்

திருக்குருகூர்

ஸ்ரீமத் ஞானசித்தசுவாமிகள் சரித்திரச்சுருக்கம்.

அனாதிமுத்தனாகிய முதல்வனது தாதான்மிய சத்தியாகிய ஸ்ரீபுவனேஸ்வரிக்கு பாண்டிவள நாட்டிலே தாமிரபரணி தீரத்திலே திருக்குருகூரென்னும் ஆழ்வார் திருநகரியிலே சுத்தசைவ வேளாளர் மரபிலே பரம்பரை ஆயுர்வேத சித்தசாஸ்திர வாராச்சியில் தேர்ந்தும், குரு பக்தி, அடியார்கள் பக்தி முதலியவைகளிற் சிறந்து விளங்கிய மேலப்பாளையம் முத்துசுவாமியாபிள்ளை யென்னும் சற்குணசீலரும், அவர் மனைவி அருந்தவப்பெண்மணி யாகிய அந்நகர் பரம்பரை ஆயுர்வேதியராகிச் சின்னப் பண்டிதர் எனப்பிரசித்தியுற்ற முத்துசுவாமியாபிள்ளை என்னும் சற்குண சீலரின் புதல்வியுமான சிதம்பரவடி வம்மையாரும், இல்லறமாகிய நல்லறத்தினை இயற்றி வருகையில், எவ்விதத்தாலும் பெருமகிழ்ச்சினையேயுடையவராயினும், மக்கட்பேற்றின்மையால் கவலைகொண்டு அவ்வில்லறகிழவோர் இருவரும் தாம் வழிபடு மூர்த்தியாகிய திருச்செந்தூர் ஸ்ரீ முருகப்பெருமானையடைந்து, கந்தசஷ்டி பலவுபவாசமிருந்து செந்தமிழ்பாமாலை பல

பாடிச் சீர்த்தி வாழ்ந்துவருங்கால், ஒருநாளிரவில் முத்து சுவாமியாபிள்ளை கனவில் அருட்பெருஞ் சோதியா நமது அருமுகக்கடவுள் எழுந்தருளி அன்ப, அஞ்சேல் நினக் கோர் புத்திரபேறு தந்தருளுகிறோம். அப்புதல்வனுக் குரிய இலக்கணங்களை சுக்கிரநாடி நந்திநூல், கமலமுனி நூல், அகஸ்தியர் சோதிடநூல் முதலியன விரித்துக் கூறும் சங்குரேகை, சக்கரரேகை, மறுமாலை மச்சரேகை, முதலிய தச அடையாளங்களும் அவனது திருமேனியிற் காணப்படும், அக்குழந்தையால் இவ்வுலகினுக்கு அனேக நன்மைகள் விளையும் அக்குழந்தைக்கு ஞான சித்தன் எனப் பெயர் விளங்கும் கொல்லம் 1043-ம்ளு பிரபவ-வருடம் மார்களி-மாதம் 9-ந்தேதி எமது நக்ஷத் திரமாகிய விசாக நாளில் மிதுன ஓரையில் பிறப்பன் என்று கட்டளையிட்டிருந்த நன்னாளிலே சிதம்பரவடிவம் மையின் திருவயிற்றினின்றும், திருக்குருகூரிலே அவ தாரஞ்செய்து ஞானசித்தரென்னும் பிள்ளைத்திருநாமம் பெற்று யாவுமோதாதுணர்ந்து, குழந்தை பருவத்திற் மூன்றுமாண்டி லரவம் முத்தமிடப்பெற்றும், பலவற்புத முதலிய வைபவங்களோடு வழர்ந்தும், இளமையிற் றானே துறவுபூண்டும், கைலைப்பெருமானே தனது மான்மழு சதுர்ப்புப காளகண்டமாதியவற்றை மறைத் துக்கொண்டுஅவதூதராய்த் திருக்கோலம் வாய்ந்து, திரு வானைக்காவி லெழுந்தருளிய பச்சைமலைசுவாமிகள் தடுத் தாட்கொள்ள, அவரையே குருநாதராகக்கொண்டும், பொதியமலை, பச்சைமலையாதியவற்றில் தனியே சஞ் சரித்தும், பதினெண் சித்தர்களுமொருவடிவானரென்ன

இறங்கிவந்து ஞானசாஸ்திரம், யோகசாஸ்திரம், வைத்திய சாஸ்திரம், பலவருளியும் மணிமந்திரவவுடதங்களாற் பல்லோர் நோய் போக்கியும், சிவனடியார் வேண்டுகோளுக்கிசைந்து சிற்சில கிராமங்களிற் பதிகங்களோதி மழை பெய்வித்தும், சென்ற 1063–ம்ஞ சர்வதாரி வருடம் சித்திராபௌர்ணமி முதல்வருடம் தோறும் சித்திராபௌர்ணமியில், பற்பல புண்யநதி தீரத்திலும், மலையடி வாரங்களிலும் நடத்திவந்த ஸ்ரீ புவனாம்பிகா யாகங்களெல்லாம் பஹிரங்கமாய் யாவருக்கும் தெரிந்த விஷயமே.

அல்லாமலும், இவ்வியாகம் செய்யப்புகுந்த விஷயமும் யாகஞ்செய்யுங்கால் ஆங்காங்கு நடந்த வற்புதமுதலிய வைபவமும், பலசாஸ்திரிகளாலும் நூற்றுக் கணக்கான ஏனைய வித்வான்களாலு மியற்றிய பிரபந்தங்களாற் பரவக்காணலாம்.

திருக்குருகூர்க்கோமான் திருவுளம் பற்றிய கருணையாவது, அநாதி முத்தனாகிய பெருமானை அநாதி பெத்தர்களாகிய ஆன்மாக்கள் இரண்டறக்கலந்து சுத்தாத்துவித பேரானந்தத்தை அடைவதற்கும் திருவருட்சித்திபெற்று உலகமுய்யும்படி சற்சமய விளக்கஞ்செய்வதற்கும் ஏதுவாயிருப்பது பலகோடி சன்மங்களிற் செய்த புண்ணிய மேலீட்டாற்கிடைத்த அருமையான இம்மானிட தேகமே. இவ்வரிய தேகத்தைப் பிணிமூப்புச்சாக்காடுமுதலிய துன்பங்களுட்படுத்தாமல் நித்தியானந்த சுகசொரூபிகளாய் உலோகோபகாரமாக, ஜீவன்

முக்தர்களாய்ச் சஞ்சரிக்கவேண்டுமெனின் சுகானு பவத்தை யளிக்கும் சர்வஜீவ தயாபரமூர்த்திகளாகிய மகாசித்தர்களின் பெருங்கருணையாலின்றி முடியாது. ஆகலின், அத்தகைய ஞானரத்தினங்களாகிய சித்தர்களை எழுந்தருளச்செய்து பூசித்து, சகல சித்திகளையும் உல கத்தார் கொள்ளைகொள்ளும்படி திருக்குருகூர் ஸ்ரீமத் ஞானசித்த சுவாமிகள் பாண்டிவளநாட்டிலே, திருநெல் வேலியிலே, தாமிரபாணிதீரத்திலே, ஆழ்வார்திருநகரி என்னும் திருக்குருகூரிலே சித்தராலயமொன்று பிரதிஷ் டித்து நித்திய நைமித்திய திருவிழாச்செய்தும், யோகாப் பியாச நிலயம் சித்தர் பாடசாலை, சாஸ்திரக்களஞ்சி யம், வைத்தியசாலை, அன்னதானமடம் முதலியவை ஸ்தாபித்தும் நடத்திவர உத்தேசித்து, பல தலங்க டோறும் சென்று, ஆங்காங்கு பல பதிகங்கள் பாடி யுலாவி வருங்கால் புதுவைபம்பதி என்னும் வேதபுரி க்ஷேத்திரத்திற் திருக்கோயில் கொண்டெழுந்தருளிய ஸ்ரீ திரிபுரசுந்தரிமாலை ஸ்ரீ வேதபுரீஸ்பரர் பதிகங்கள் அருளிச்செய்தும், திருவிரும்பைமா காளப்பதிகமியற்றி மேல்படி சிவக்ஷேத்திரத்திற் 1083-ம் ஞ பிலவங்க வருடம் சித்திரா பௌர்ணமி 20-வது யாகத்தை பூர்த்தி செய்தும் வைகாசி-மாதம் விசாகநாளில் புதுவை யெனும் வேதபுரி க்ஷேத்திரத்திற் சர்வலோக மாதாவாகிய ஸ்ரீ புவ னாம்பிகா திருவருட்கருணையால் அடியேனின் பூர்வ புண்ணிய மேலீட்டாற் திருக்குருகூர்க்கோமான் ஸ்ரீமத் ஞானசித்த மூர்த்திகள் அடிமையின்பால் திருக்கருணை கூர்ந்து சிறியேனை மரபின்வழி நின்றொழுக மனத்திடங்

குரித்து நோக்கரு ஞானநோக்கமழித்து ஜிஸ்யனுகத் திருவருட்கடுமைசெய்து குருநாதன் சமாதியுற்றனர். அக்காலமடிமையின் வயது (15) நாதன் சமாதி பெரு தற்கு ஆறு திங்கட்கு முன்னதாகவும்.

போதிகை மேவும் புனிதன்றிருவடி
பதிபு நின்மனம் பாக்கியஞ் செய்ததே—யெனத்

திருவாய்மலர்ந்தருளியும், ஆயுர்வேத பண்டித சித்தசாஸ்திர ஆராய்ச்சி செய்வித்து வந்தனர். இவ்வாறு பயிர்ச்சி செய்து வருங்காலத்தில் மேற்குரித்த தருணம் சமாதி கொண்டனர்.

நோக்கருஞான நோக்கமழித்ததாவன.

யென்னுமமெவ்வார் நீ யியற்றிடுவா யெனவியம்பித்
தன்மயமா நின்றிலங்கு தற்பரையாம் புவனையருள்
விண்மயமா யெனைநோக்கி விரைந்துருகி மோனமுடன்
நன்மார்க்க மரபின்வழி நலமருள்வோன் வானமதாய் (1)

வானமதி லமர்கன்னி வாலையெனும் புவனை திரி
தேனமூர்தம் மதியாகத் திருக்குருகூ ரென்கோமான்
ஞானடையக் கருணைபுரி நகர் புதுவை தனிற்மூர்த்தி
பானுமதி யுலகரியப் பரையருள் சமாதி கொண்டார் (2)

கொண்டநற் சமாதிநிலை குவலையத் தெவருங் காணப்
பண்டுள பொருளாய்ப் பரையுருவே யறுமகவாய்க்
கண்டனவே லமர்கட்கே கருணைபுரி மிகதலமாய்
விண்டமறை செந்தூராய் விதித்தபணி குகனருளே (3)

திருக்குருகூர்க்கோமான் திவ்யசரித்திரங்களை சென்னையிற் பிரசித்தியுற்ற வித்துவானாக விளங்கும் மகா-௱-௱-ஸ்ரீ திருமயிலை சண்முகம்பிள்ளை அவர்கள் லோகோபகாரமாகப் பாடிய திருக்குருகூர் சித்தமான்மியம் 722 பாடலுள்ளன. அன்றியும் எழிதில் எவருமுணர மகா-௱-௱-ஸ்ரீ அஸ்டாவதானம் பூவை கலியாணசுந்தர முதலியாரவர்கள் செந்தமிழ் வசனநடையில் எழுதிய ஞானசித்தப்பிரபாவம் மூலமாகவும், நன்ருய் தெரியவரலாம். அன்றியும் நம் சுவாமிகள்மீது பிரபந்தமியற்றி வழிபட்டோர்கள். பற்பல மடாதிபதிகளும், அடியவர்களும், அஸ்டாவதானிகளும், சமஸ்தான செல்வர்களும், ஜமீன்களும், மகாவித்வான்களும், வைணவ சங்கத்தலைவர் முதலியோர்களும், உத்தியோகஸ்தர்களும், புறச்சமயத்தவர்களும், எண்ணிலர்களாவர்.

வைணவர் ஓர் பெரியாரியற்றிய ஸ்ரீ ஞானசித்தசம்பு
என்னும் பிரபந்தத்திலுள்ளன.

வானிலுள்ள வருஷம் பொழியுமே
வட்டமாகவு மாரி தடுக்குமே
கானில் வேங்கையைக் காண்டலும்வெல்லுமே
கடினமாம் விஷக்காற்றைத் தடுக்குமே
ஆனமாநக ராரேடுஞ் செல்லுமே
ஆறுமாநக ராமென வாகுமே
ஞானயோக நடுநிலை பேசிய
ஞானசித்தர் நவில்பதிகங்களே.—என்றனர்

மூத்தர் நேர் நகையார்மாய முயக்கெனும் வலையார் சாருந்
தத்தெலாந் தணர்ந்தோன்றாய சாம்பவி தயாவைப் பெற்றேன்
சித்தெலா மிவனைத்தேடிச் சென்றன வென்றால் ஞான
சித்தனார் கிரத்தைப் பேசற் ஷேடற்கு மெழிதன்றாமல்.

இஃது நிற்க திருக்குருகூர்க் கோமான் ஸ்ரீமத் ஞானசித்த சுவாமிகள் அன்னையார் சிதம்பரவடிவம்மையின் திரு வயிற்றின்கண்ணே 5—வருடங்களுக்கு பின்னதாக ஓர் பெண் மகவு உதிக்க அம்மகவினுக்கு ஸ்ரீ காந்திமதி அம்மையென திருநாமம் புனைந்து, பெற்றோர் பிரீதியால் ஆண்மகவுயெனக் கருதி வித்தியாப்பியாசம் செய்து வளர்த்து வந்தனர். மணப்பருவம் வர குலசேகரம்பட் டணத்திலே சிவபக்தி வாய்ந்தும், மூலாதாரவாசியாகிய பிரணவ சொரூபியைத் தியானிப்பவரான எனது தந்தை யாகிய இருளப்பபிள்ளை அவர்களுக்கு திருமணம் செய் வித்திருந்தன.

இத்தகைய வென்கோனை யீன்றவன்னை தன்வயிற்றிற்
அத்தனருள் காந்தியதி யன்னவற்கே தங்கையதாய்
வித்தகமாய்த் தோன்றிடுக வினைப்பயனா லெனக்கன்னை
உத்தமவர்க்கம் வேண்டி யூட்டுநல் லமுர்தந்தானே. (4)

ஊட்டுநல்லமுர்தந் தன்னா லுகந்தயென் நாதனன்பால்
கூட்டியே கொண்டுபோல்யம் குறித்தனர் பலகாலன்பை
நாட்டிய நாதன்புதல்வை நற்பதஞ் சாருங்காலே
பூட்டிய கருணைமோனம் புவனையை யென்னுள்ளாக (5)

மவுனமா யருளிநாதன் மனத்தின்கண் குறித்த நோக்கம்
கவனமா யென்னுளாடக் கருணையாம் புவனஞானம்
புவனத்தின் மிசைநாளுடிப் புகழ்பெறச் செய்யா நேர்மை
தவமுளாற் விரும்பு மாத்மத் தன்பல னடைதற்கென்றே (6)

குருநாதன் திருவடி நிணைவுற் றகன்ற தவக்குறையாலும், பால்யமடமையாலும், ஆத்ம லாபமடையும் ஞான சித்தியை நாடாது பிரபஞ்சமெனும் உலகவாழ்வாம். புகழை விரும்பியே நீடித்த காலம் அம்பிகையை தியானிக்கலானேன்.

தடுத்தாட்கொண்ட கருணை.

சித்தியா மட்டமாதி செய்பல கிரிகையாற்றிப்
பக்திகொண் டடிமை போற்ற பறைதடுத் தாண்ட நேர்மை
முத்தியின் வழிநீ செல்க மோனநின் நாதநோக்கம்
புத்தியி லுணர்வாயென்றே புலன்தனை மாற்றிக்கன்னி (7)

கன்னியந்தாதிமாலை கண்டருள் கொள்கவென்றே
பண்ணிய தவங்களெல்லாம் பலன்பெறுங் காலமென்று
உன்னிய நெஞ்சத்தாலே யுலகில்மற் றன்பர்போற்ற
எண்ணிய பிரீதி தன்னு லிப்பணி புரிதல் நன்றே (8)

நன்றென யெனக்கு நாதன் நற்பதஞ் சாறுங்காலை
சென்றுநா னருகிருந்தும் சீர்பணி புரிந்தபுண்யம்
கொண்டிடத் தன்னுமத்தைக் குணமுட னெனக்கு மூட்ட
உண்டதோர் லகிரி தன்னு லுமைதன்ப் பணியும் பாக்கியம் (9)

பாக்கியமிதுவென்றெண்ணிப் பக்திகொண் டர்ச்சிப்போறை
யோக்கியமாகி நிற்க வுமையருள் புரிந்துபின்னும்
ஆக்கிய கர்மமுற்று மகற்றிநல் யோகமேவிச்
சிலாக்கிய மாகுஞ்ஞான சித்திதந் தருள்செய்வாளே (10)

பூர்வ புண்ணிய மேலீட்டாற் குருநாதன் சிறியேனை மாபின்வழி நின்றொழுக மனத்தின்கண் குறித்த பெருங் கருணை நோக்கத்தாலும், பதினாறாம் ஆண்டு தொட்டே ஸ்ரீ அகில லோக வன்னையாய் அனைத்துயிற் கரசியா நின் றருளும் ஸ்ரீ புவனாம்பிகாவென்னும் திருநாமத்தைத் தியானிக்கும் பாக்கியம் பெற்றேன்.

செப்பொணுப் புகழில் வாய்ந்துஞ் சித்தர்தம் கணத்திற்றோன்றி
அப்பரும், ஞானர், சுந்தரர் ரருளிய தலங்கள் சென்றும்
இப்பெரும் பாமாலை போலா மியற்றியறப் புதங்கள் நாட்டி
ஒப்பவிக் கலியிற் மூவர் வுண்மைநூ லுணர்த்துஞ் சித்தர் (11)

அருளிய அரிய க்ஷேத்திரக்கோவைகளாகிய சிவபெரு மான் இலக்கணங்களைபுணர்த்தும் பதி சாஸ்திரங்களைப் பசுக்களாகிய நாமோதியுணர்ந்து வழிபட்டு திருவருட் சித்தியாகிய ஞானமெய்திப் பிறவிப் பெருங்கடல் நீந்திச் சிவபெருமான் திருவடிக்கரைசேருமாறு லோகோபகார மாய் இரண்டாம் பதிப்பிட்டு வெளியிடும் அரியபெரிய புண்ணியம் அடைவதற்காக முதலில் எனக்குக்கிடைத்த ஸ்ரீ கன்னியாகுமரிப் பகவதியந்தாதி யெனும் ஞானமாலை யைப் பதிப்பிடும்பொருட்டு அன்புகொண்டேன். அவ் வாறே, சர்வபக்தகோடிவான்மாக்களும், இவ்வரிய சற்சமய விளக்கம் செய்விக்கும் பதிசாஸ் திரங்களைப் பதிப்பிடும் பணியை பூர்த்திசெய்வித்து புண் ணியம் பெருக. திருவருளை முன்னிட்டு அன்பு பாராட்டு கின்றேன். சுவாமிகள் அருளிய க்ஷேத்திர கோவை (92) சாஸ்திரக்கோவை (12) வரை சுருதிமூல்மார்க விளங்கு

இன்றன. மேற்படி சுருதிகள் விஷேடமாய் வடதேசங்களிலும், பலவிடங்களிலுமாக மறைந்து வெளிவராதிருப்பதால் கூடியவரை சுவாமிகளின் தொண்டர் குழாங்களைக்கண்டு தெரிசித்து, சுருதிகளை சேகரித்து ஒருங்கு திரட்டிக் கலிக்கோ பைண்டில் வெளியிடும் பணியைக் கருதி அன்புகொண்டேன். அவ்வாறே திருவருட்கூட்டி வைக்குமாறு தியானிக்கிறேன். இதற்குப்பின் வெளிவருபவை சுவாமிகள் வயது (12-ல்) ஸ்ரீ முருகப்பெருமான் சன்னதியில் இயற்றியருளிய ஞானபாஸ்கரோதயம் பாடல் (1000) அதிலுள்ள சில பதிகங்களடங்கிய நூல் கிடைத்திருப்பதால் பதிப்பிட்டு பின் வெளிவரும்.

உ

சிவமயம்.

சாத்துகவிகள்.

வேளாண் குலத்தவரும்
சுத்தசைவாசாரிய பரம்பரையாருமாகிய

காஞ்சிபுரம் சேனாதிபதி தேசிகர்
குமாரர்

சிங்காரவேலு தேசிகரவர்களியற்றிய

அறுசீர்விருத்தம்.

தண்டமிழ்க் குமரிமாலை சாற்றிடும் புலமையோடு
கண்டவர் வயமாங்காட்சி காரணப்பெயரையோர்ந்தே
பண்டையே ஞானசித்த னெனப்பெயர் பகர்ந்த மேலோர்க்
கெண்டகு குணங்களில்லை னியற்றிடு கைம்மாறென்னே.

உரையாசிரியர் - மகாவித்வான்
காஞ்சிபுரம் - சபாபதி முதலியாரவர்கள்
குமாரர்

பாலசுப்பிரமணிய முதலியாரவர்கள்

இயற்றிய

பன்னிருசீர்விருத்தம்

கலைமாதினருளத்துறற் கணபதிதொட்டிறைஞ்சி முடிக்கனஞ்
சென்று-கருணைதருசதா சிவமாங்கந்தனிருசரணமலர்காட்சி தங்
கும், அலைகடல்சூழுலக மெலா மன்பர் பலரும் வணங்க

வாங்காங்குற்று அட்டமாசித்தி முதலவரவர்கட்கானதுபோ லறிவித்தோங்குஞ், சிலைபுருவமத்தியில்வாழ்சிவஞானசித்தனெ னுஞ் சீர்த்தியோனுட் - டெவிட்டாத வானந்த மயமோங்கு கன்னிற்சிற்சத்திக்கன்பாய், நிலைபிரியாவந்தாதித் தமிழ்மாலை யன்பருக்காய் நிகழ்த்திமேலும் - நித்தியத்தினிலைபிதெனச் சத் தியமாயுரைத்தவரு ணிலமையோனே.

புரசை - மகா-ஙா-ஙா-ஸ்ரீ அஷ்டாவதானம்

சபாபதி முதலியாரவர்கள் மாணுக்கரும்

இந்நூலாசிரியராகிய ஸ்ரீமத் - ஞானசித்த சுவாமிகளின்

திருவடிச் சம்பந்தருமாகிய

திருவாரூர் சின்னச்சாமி பிள்ளையவர்கள்

இயற்றிய

விருத்தம்.

தேனலர்ப்பொழிலோங்குயர்குமரித்
தேவியந்தரிபகவதியார்தாட்
கானவன்பொடந்தாதியொண்மாலை
யணிகொளப்புனைந்தர்ச்சனைசெய்தான்
ஞானசித்தனெனுந்திருநாமம்
நண்ணிவந்தெமருக்கருணுதன்
மோன முற்றியமா முனிவோரும்
மொழியொணு வியப்புள்ளுறமாதோ.

அஷ்டாவதானம்

பூவை - கலியாணசுந்தரமுதலியாரவர்கள்

இயற்றிய

பதின்சீர் வண்ணவிருத்தம்.

குழிப்பு

தான தத்ததன தனன தனதன தானன

ஆதனத்தைமரைமலராயுறுமிருமாதரா
ரார்வமுற்றவிபவமதாகியபொருணேருவா
ராதரித்தபுசழ்கனியாகுமரியையாளுவா
ளாரணத்தின்முடிவினிலார்பகவதிமீதிலே
நீதமிக்கநவரசமார்கவியொருநூறதா
நீர்மையுற்றகனிவொடுபாடினர்நயமாகவே
நாததத்துவமுடிவிலோர்பரைதனை நாடிவாழ்
ஞானசித்தமுனிவரனுவுயர்சிவயோகியே.

திருமயிலை வித்துவான்

சண்முகம்பிள்ளையவர்களியற்றிய

கட்டளைக்கலித்துறை.

பகவனெனவீண்டிடுகுறியாகப் பலமறையு
முகவையினேதுமவன்பரமாமென்றுணர்த்துகிற்கும்
பகவதிக்கன்பினருந்தமிழாற்பைந்தொடைமிலைந்து
தகவினுவந்தளித்தான் ஞானசித்தனித்தாரணிக்கே.

திருமயிலை

வி. சுந்தரமுதலியாரவர்களியற்றிய

அறுசீர்க்கழி நெடில் ஆசிரியவிருத்தம்.

நீர்மேவுநெடுஞ்சடிலத் திறைவனிடத் தென்ஞான்று நிலவு மேவிப், பார்மேவு சராசரங்கள் யாவுமொருங்கீன்றின்னும் பாவு கன்னிப், பேர்மேவு தென்குமரிப் பகவதிமேற் பாமாலை பெட் பினீந்தான், சீர்மேவு தவஞான சித்தனறிவோர் சிரமேற் சிறக்கமாதோ.

குன்றத்தூர்

மதுரகவி - மாணிக்கமுதலியாரவர்கள்

இயற்றிய

அறுசீர்கழி நெடில் ஆசிரியவிருத்தம்.

மோனசித்த முனிவர்தொழுந் தென்குமரிப் பகவதிமேன் மொழியெனுது, யானசித்தவருந் தவத்தின்வழி நின்றவெழிற் குருகூரினதுமேவும், ஞானசித்த நலத்தகையோனவின் றளித்த பாமாலை நயத்தை நோக்கில், ஆனசித்தன் புடையோர்யார்முடி துளக்கியகங்கரையா ரவனிமீதே.

திருநெல்வேலிஜில்லா தென்திருப்பேறை

கவிராசர்

பிச்சுவய்யங்காரவர்களியற்றிய

எண்சீர்விருத்தம்.

அலைகடலைக்கடைந்தெடுத்தவமுதைமுன்ன
ளமரர்களுக்கென்றளித்தானங்கண்மாலுஞ்
சிலைநுதலார்சிரஞ்சேருமலரின்றேனைச்
செறியறுகாற்றிரட்சியுண்ணுமென்றேயெண்ணி
கலையுணரும்புலவாளிக்கமுதமென்னக்
கன்னியெனுங்குமரியந்தாதிசொன்னான்
மலைபுரிதோள் மன்னர்புகழ்குருகூர்வாழு
மாஞானசித்தனெனுமகிமையோனே.

திருசிரபுரந் தையக்காசாமியென்னும்

ஸ்ரீமத் - பொன்மலைச்சாமிகள்

சிஷ்யனும்

ஸ்ரீலஸ்ரீ ஞானசித்த சுவாமிகள்

திருவடிச்சம்பந்தருமாகிய

பூவிருந்தவல்லி

செங்கல்வராயமுதலியாரவர்களியற்றியது

கன்னியாகுமரியம்மை பகவதியின்
காட்சியே பெறவிளங்கிடும்
மன்னுஞான சிவசித்தனன பெரியோன்
மகிழ்ந்தினி தியற்றிய
துன்னுமாலையொருநூறுமேகவிதை
சொற்றிறம்பொருளுணர்ந்துளோர்
மன்னரான சிவயோகியோரவர்கள்
வாழ்வுபெற்று மனமகிழ்வரோ.

மதுரைஜில்லா பெரியகுளம்தாலூகா

தேவாரம் ஜமீன் கார்வார்வேலைபார்த்து வந்த

பழனிக்குமாரப்பிள்ளையவர்களியற்றிய

அறுசீர்விருத்தங்கள்.

முகவதிகசுந்தரியாம் கிராதகுலக்கன்னியின்மேல் மோகங் கொண்டு, சுகவதிகுஞ்சரியாடன்றணைப்புயங்களழுந்துபுயச் சுப்ரமண்ய, குகவதினமுளமதனிலெனக்கூவி யருள்சுமந்து குறைவுதீர்த்தோன், பகவதியாமுமைபரமாய்ப்பாமாலைஞான சித்தன்பகர்ந்தான் மன்னே.

வானசித்தமெலிந்திடவே சிறைப்படுத்தும் வன்கண்ணன் வலியசூரன், தானசித்தங்கந்தெரியாதகற்றிவைத்த சண்முகன் றன்றாளைப்போற்றி, மோனசித்தத்தவனிதன்னில் முறைமுறை யாய் நடத்தவல்லன், முக்திக்காளான் ஞானசித்தத்தவமுனி ஞான பாஸ்கரமாலைநவின்றான் மாதோ.

உ

திருவருட்சகாயம்.

அறிக்கை.

கன்னியாகுமரித்தலத்தின் மான்மியம் மிகச்சிறந்தன வென்பதை தலப்புராணம் வாயலாகத்தெரிந்து, பக்தி பாலிக்கவேண்டுவது அன்பர்களின் மிகுந்த கடமையென என் நெஞ்சகத்துணிவு. மூர்த்திதலந்தீர்த்தமென முப் பெருமைவாய்ந்தன. தவவொழுக்கம் நீங்காத கன்னி நாயகி வாசஞ்செய்யும் ஸ்தலமாம். இப்பூமண்டலத்திலே சிறந்தனவாகிய ஸ்தலங்கள் 26. அதில் 5 மிகப்புண்ணிய ஸ்தலம். இதிலொன்றாகியது குமரிஸ்தலமாம், காசி, கன்னி, காஞ்சி, சேது, ஜனார்த்தனம் ஆக 5 இப்பெருமை யுணர்ந்து ஸ்ரீ பகவதி அந்தாதி ஞானமாலையை பாரா யணஞ்செய்யிற் பக்திபாலித்து திருவருட்சித்திபெறுவ ரென்பது என் அநுபவ உண்மை.

இங்ஙனம்,

அடியார்க்கடியேன்,

குலசைநகர் சங்கரன்.

உ

திருவருட்சகாயம்.



கன்னியாகுமரிப்

பகவதியந்தாதிமாலை.

காப்பு.

கம்பத்தடியாங்கநுரிலேயமர்ந்த
கும்பக்கடக்களிற்றுக் குஞ்சரனே - யம்போ
ருகவிதழின்மேலமர்ந்தவோம்குமரிமாலை
சகமதனிற்சொல்லவரந்தா.

நூல்

கன்னிநற்சூலினிகாளியெண்டோளிகடவுளிடம்
உன்னிநிற்கின்றவுமையெனிலாதவுலகங்களின்
றன்னியர்போனின்றருள்புரிந்தாண்டவியாரணனுஞ்
சென்னிதொழப்புரிபாதாரவிந்தமென்சிந்தையதே. (1)

சிந்தையிலன்புதினந்தினம்பொங்கிச் செழித்திடச்செய்
கந்தனையுங்கரிதன்னையுமீன்றபின்கன்னியென
வந்தனைசெய்மறைமாதவர்யாவரும்வந்துதொழுஞ்
சுந்தரமாமயிலேயெளியேனையுஞ் சோதித்தையே. (2)

சோதித்தபோதுந்துணையெனக்குன்னடித்தொண்டு
செய்யப்,போதித்தசொல்லைமறக்ககிலேனிப்புவிதனிலே
வேதித்ததினடுச்செந்தணல்ரூபமுன்மேனியென
ஆதித்தனம்புலிபோற்றவென்முன்வந்தமர்ந்தவளே. (3)

முன்னுமகிடனைச் சங்கரித்தன்னுன் மதுகிலெழுந்
துன்னும்பெரியவளேயுலகேழுமூட்டுவித்து
மன்னுமுனிவர்கள்வாக்கினினின்றருள் வாலையெனுஞ்
சின்னஞ்சிறுமுதலாய்கன்னிதோன்றுஞ்சிவக்கொழுந்தே

கொழுந்தேபளக்கொடியிடையாகியகோமளமே
செழுந்தாமரைமலரேமலர்மேவுந்திருவுருவே
எழுந்தேன்பவக்கடலாகிபமாதர்களிட்டமதில்
அழுந்தாதவண்ணம்வந்தாண்டருள் கன்னியிலாண்
டவளே (5)

ஆண்டவளாகுமபிராமியாயிநின்னன்பர்கட்கு
வேண்டியவாறருள்செய்திடவேண்டியிம்மேதினியில்
தாண்டவமாடியசங்கரனுரிடந்தானமர்ந்த
பாண்டியனூர்மகளாங்கன்னிநின்ருள்பணிந்தருளே (6)

தாளிற்சிலம்புசலஞ்சலமென்றொலிதானறையந்
நாளிலரக்கர்குலத்தைநடுக்கிய நற்குமரன்
தோளிலிருந்துதுலங்கிடும்போதுன்றன்சொன்மொழியாற்
கோளுமொழித்துக்குமரனென்றேகுணங்கொண்டனனே

குணமுங்குறியற்றருளேயுருவெனுங்குஞ்சரனை
மணஞ்செயுமுன்பெற்றமாதாவேயிருமங்கைபுகழ்
கணஞ்செறிமாமதியென்முகத்தாயுன்றன்காட்சிபெற
இணங்கியதேவருமூவருமியாருமிருப்பதுவே. (8)

யாரும்புகழ்ந்திடுநின்னடிக்கேதொண்டியான்புரியச்
சேருங்குமரக்கடவுடுணைகொடுசெப்புகின்றேன்
நீரும்பிறைபுமறுகொடுவில்வமுநீண்முடியி
லாரும்பரமன்மகிழ்ந்திடுமானந்தமாக்கடலே. (9)

மாலோடயனரன்மாகேசன்சாம்பனும் வாசவனுங்
கோலக்குமானுங்குஞ்சரனும்புகழ்கோதையுன்றன்
நீலநிறத்தழகாகியமேனியுநின்னருளும்
பாலனெனக்கினியென்றைக்குமுன்வந்துபாலிப்பதே (10)

அதுவோடவனவளாகியுமல்லவுமாகிநின்ற
முதுபொருளேமுருகேசன்கணபதிமூர்த்தியெனச்
சதுமறைபோற்றியதாயேநினதுபொற்றாடருதற்
கிதுசமயஞ்சமயாதீதஞானத்தெழுங்கடலே. (11)

கடலேமலைவற்றகற்பகமேநின்கருணைசுரந்
தடமேமுதலவகற்றிவிட்டேயெனையஞ்சலெனத்
திடமேயுறுசிங்கவாகனத்தேறித்தெரிசனைதந்
துடனேயருள்புரிந்தென்றனையாளுவதுன்கடனே, (12)

கடனேயுனக்கினியென்செயனின்செயல்கண்டுகொளு
மிடமேயெழுந்திங்கெனக்கருள்வாய்புவனேசுரியே
மடமேமடமயிலாகியமாணிக்கமாதவத்தின்
குடமேகுடநிறைபாலமுதேயெனைக்கொண்டருளே. (13)

கொண்டே திருப்பதச்சேவையுந் தந்துன்கொழுநரடித்
தொண்டேசெயப்புரிந்தானந்ததீரனென்றியாருஞ்சொலக்
கண்டேகளித்தென்றனைம்புலப்பாடிக்கதவதனைத்
துண்டாயடைத்துச்சுகானந்தவீட்டின் சுகமருளே. (14)

வீட்டைத்திறந்தென்னைக் கூட்டியுங்காட்டியவ்வீட்டி
னுள்ளே, காட்டிற்பரவிய கள்ளர்வராவண்ணங்காத்
தருளி, வேட்டைக்குரியசெந்நாயெனும்வீரர்வெளியிரு
க்க, மாட்டிக்கிருபைசெய்வாய்மறைக்கோட்டினில்வாழ்
கன்னியே. (15)

கன்னிக்குச்சொந்தமிக்காயாபுரியெனக்கண்டிருந்துஞ்
சின்னஞ்சிறுவர்களாகிய தத்துவர்சேடிப்பதென்
வன்னப்பரமன்வளர்சிரத்தேகுடிவாய்ந்திருந்த
முன்னப்பழம்பொருளேநின்றன்முன்னர்மொழிந்தனனே (16)

மொழிகின்றசாதனமென்னவென்றுவிந்தமுவுலகும்
வழிநின்றவல்லபநின்னருளென்னமதித்ததனால்
அழிகின்றதேகமதாமிதற்குள்ளுமமர்ந்திருந்து
பொழிகின்றதாரமுதாலழியாவண்ணம்பூட்டுகவே. (17)

பூட்டுகவென்றுநினைத்துச்சித்தந்தனிற்புத்திசரி
நீட்டலொன்றிட்டவிதமதென்னுமென்றுநேசிக்கிலோ
காட்டிலகப்பட்டகள்ளர்கள்கூடியிக்காயமதின்
பூட்டுமிருக்குமிடமறியாவண்ணம்பூண்டதுவே. (18)

பூண்டவர்தங்கிளையாவருஞ்சேர்ந்திப்புவியினுள்ளே
வேண்டியவாறவர்தம்மனதேதெய்வமென்னவெண்ணித்
தாண்டவமாடியதர்பரனூர்வைகுந்தன்சபையைத்
தீண்டவிடாமற்சிற்றின்பத்தின்மேவித்திகைப்பதுவே (19)

திகைப்பதுவேயென்றன்சித்தத்திற்புத்திதெரிவித்ததில்,
தொகைப்படிகள்வர்கள்சொல்வழியேநற்சுகமெனவே,
தகைப்படவென்றனைத்தட்டழித்தேவிட்ட தாரணியில்,
பகைப்படும்பேர்க்குப்பயந்துநின்றுனையும்பற்றினனே (20)

பற்றினனேயகிலாண்டங்களாண்டநின்பாதமதில்
முற்றுமென்சித்தந்தனையேயிருத்திநன்மோட்சமதைப்
பெற்றருள்சேரெனச்சித்தமுதலியபேர்கடங்கள்
சுற்றந்தனைக்கொன்றுதோன்றலைக்காத்தருள்சுந்தரியே21

சுந்தரியம்பிகைவாலையெங்காரணிதொண்டர்கள்வாழ்
முந்தியசாக்கிரந்தன்னின்முன்னேனுமுனைந்திருந்த
பிந்தியதாஞ்சொர்ப்பனந்தனிற்கண்டபெரியவனுஞ்
சந்திரனைச்சடைசூடியருத்திரன்றன்பதியே. (22)

தன்பதியாஞ்சுழுக்திப்பதிக்கப்புறந்தன்மைசெறி
பின்பதமாந்திருமால்துரியத்தினிற்பேணியுற
அன்பொடதுகடந்தேயவர்தன்மகனாகிவரும்
நம்புமயன்றுரியாதீதநற்பதிநாடினனே. (23)

நாடுமிவ்வைவர்க்குநாயகியாளருணல்கியதாற்
றேடுமயனுலகந்தன்னைச்செய்பக்திநநெடுமால்
கூடும்பலவுயிர்தன்னையுங்காக்கக்குறிப்பறிந்து
நீடும்பரமனெலாமொழிந்தேயருணேர்ந்தனனே. (24)

நேயமதாகியவைவர்தமக்குமிந்நீடுலகு
பாயமதாகவருள்செய்தங்கங்குபடிந்தருளு
மாயமதையெவர்கண்டறிந்துன்னைவணங்குபவர்
தூயநற்சித்தருஞ்சொல்லியமுத்தருந்தொண்டருமே (25)

தொண்டர்கள்போற்றுஞ்சுகப்பொருளேயிந்தத்தொல்
லுலகில், வண்டர்கள்கூடிவகைபலவாகியவள்ளலென்று
கண்டேயறிந்தவர்போற்சொல்லிமுற்றுங்கதறுகின்றார்,
பண்டேபயின்றபழம்பொருளேநின்றன்பாக்கியமே (26)

பாக்கியமாகியிப்பாருலகெங்கும்பரவிநின்ற
யோக்கியமேயன்பருள்ளத்திற்றோன்றுமுமைகவுரி
காக்குஞ்சிவானந்தியீஸ்வரிதேவிபென்கண்ணிசைந்து
வாக்குமனங்கட்குமெட்டாதுநின்றிடும்வாழ்முதலே.(27)

முதலைமூடிவற்றமுத்தேடம்முத்தின்முகப்பிருந்த
விதமாகியவிளக்கேவிளக்கின்னடுவீற்றிருந்த
பதமேபதந்தரும்பண்பேபகவதிபார்நிறைந்த
சதமாயிரலட்சம்பேருள்ளவீரிநின்றாடரவே. (28)

தரவேசமயஞ்சமயமிகாமென்றன்றத்துவர்கள்
வரவேயொழித்துமகிழ்வுதந்தேநின்வடிவதனைத்
திரமாகக்காட்டியென்சித்தமும்புத்தியிற்சேர்த்தருள
வரமதுவேண்டுகின்றேன்வடிவேகன்னிவாழ்பவளே. (29)

வாழ்பவளேபுவனப்பதினாலின்வளர்முடிமேல்
காழ்பெறநாலைந்துவன்னமதாகுங்கலைமதியாய்ச்
சூழ்பவளேசுடரென்னத்ததும்பிச்சுழியின்மையத்
தேழ்பதிமாடத்தின்மேலாயமர்ந்திடுமீஸ்வரியே. (30)

ஈசுரியேயெனக்குன்றுணையன்றியிங்கேதுமிலை
பாசமதாகியதத்துவர்கூடிப்பதைந்தொடுங்க
வீசுகின்றாரினியாணிதற்கென்செயமேதினியில்
பூசுரர்போற்றிசெய்பொன்னகர்மேவும்புராதனியே. (31)

புராதனியேபரமானந்திதேவிநின்பொன்னடிக்கே
இராவும்பகலுமிடைவிடாதன்பொடிறஞ்சுகின்றேன்
தாரதலமீதிற்றமியேன்படுந்துயர்சாற்றுவதென்
பாராமுகமேயின்றியாண்டருள்வாயெழிற்பைங்கொடியே.

பைங்கிளியாகிப்பாருலகெங்கும்பரவிநின்றே
யைங்கரனொடெழிலாறுமுகன்றனக்காதரவே
திங்களணிந்துநற்றில்லையிலாடியதேசிகனார்
பங்கிலமர்ந்தபகவதியேநின்பதந்துணையே. (33)

நின்பூங்கமலத்திருவடிபோற்றியநேசரிடம்
அன்பாகவேநின்றருள்புரிந்தாட்கொள்ளுமாரணங்கே
என்போற்கொடியவர்யாவருமில்லையிங்கென்றிடினும்
உன்பாதமேதந்துகாத்தருள்வாயெழிலுத்தமியே. (34)

உத்தமியாய்நின்றமெய்ப்பொருளேயிவ்வுலகனைத்து
மொய்த்தவளேயிப்புவனசராசரமுற்றிலுமே
நித்தமுங்காக்கும்பொருளேதுரீயநிலைப்பதிமே
லொத்துறைதேவியெனக்குன்றுணையென்றுமுண்மையிதே

உண்மையதாகுநகாரமகாரமுயர்சிகரம்
வண்மையதாகும்வகாரம்யகாரமிம்மாநிலத்தில்
எண்வகைதோற்றத்துளொன்றுன்வடிவுமவ்வேழுயிருந்
தண்மையுடனிறைந்தானந்தங்காட்டுந்தயாநிதியே. (36)

நிதிதருமைபுங்கிலியெனுமந்திரநீடுலகிற்
சதியொருகோடிகள்செய்தாலுநீக்கிடுஞ்சவ்விதற்கங்
கதிகாரியாம்பிரணவத்தினைச்சேர்த்தருச்சித்தேத்திடிற்
புதிதானசொர்க்கமுந்தந்தருள்வாளெழிற்பூங்கொடியே.

கொடியேகுடிகொண்டகோமளமேயக்குமுதமலர்ப்
படிவேபடியின்மிசையிருந்தாண்டருள்பைங்கிளியே
அடியேன்படுந்துயர்பாராதிருக்கிலிங்கைவர்செயுந்
துடியேபொறுக்கவுங்கூடலையேபழிசூழ்ந்திடுமே (38)

சூழுங்கடற்புவிவாழ்மாந்தருன்னைத்துதிசெயவே
வாழும்படிக்குச்சுகானந்தவீட்டைவழங்குமம்மே
யாழுங்கிளியுமமுதமுநேர்மொழியாயடியேன்
ஊழும்பவமுமெரித்தருளொன்றவுணர்த்துவையே. (39)

ஒன்றேயுவனதுதிருவுருவங்களையோதுதற்கிங்
கென்றுலெனதுளத்தேறுதவண்ணமிங்கேனமைத்தாய்
நன்றேயுனக்கினிநான்சொல்வதாலென்னநன்மைசொ
லாய், அன்றேசராசரமெல்லாம்படைத்தருளானந்தியே.

எல்லாப்புவனத்துயினையுமீன்றவெளிலணங்கே
வில்லார்மணிமுடியம்பிகையேயென்வினையறிந்த
தல்லால்விழைந்தவையெல்லாங்கொடுக்கவருணிறைந்தும்
பொல்லாதபிள்ளையென்றேபுறத்தேவிட்டுப்போகுவதே

குற்றங்களைத்தனைநான்செய்தபோதிலுங்கோகனகத்
துற்றநின்பாதமதிலென்மனத்தையொடுக்குவேயென்
றற்றமிந்நாள்வரையெண்ணிநின்றேனஃதியாதெனிலோ
பெற்றவளென்றுபிழைகொண்டுநின்றவிப்பேதையனே.

பேயனெனக்கருள்பெண்ணரசேநற்பெருமைசெறி
தாயன்றிப்பிள்ளைதழைத்திடுமோவிந்தத்தாரணிக்குள்
மாயமதாகமறைந்துநின்றுயருள்வள்ளலுன்றன்
சேயினையெப்படிச்செய்தாலுமஃதுன்றறிவுளமே (43)

திருவேசெறிதிருமாலோடயனரன்றேவருமுன்
பாமெனப்போற்றிவணங்குபோற்பாதத்திற்பாவியென்றன்
சிரமேபொருந்திப்பணிந்திடவேதயைசெய்தருள்வாய்
அரணுரையுங்கடந்தப்பாலநுவரையாள்பவளே. (44)

பவநோய்க்கிடமெனுமாதர்வதனப்பருவலைக்குட்
சவமதுவாகித்தளருமுன்பேவந்துன்றுடருவாய்
உவணமதிலெழுந்தேவருமாயனுடன்பிறந்திப்
புவனசராசரந்தன்னையுண்டாக்கியபொன்னணியே. (45)

அணிமாதியோடட்டசித்தியைக்கேட்கின்றவன்பர் மனப், பிணியேயொழித்தவர்தம்முள்ளமர்ந்த வன்பே யெனது, துணிவினையோர்ந்துபராபரியேயிங்குதோன்றி வந்துன், பணிசெயவைத்தருள்வாயென்னைநீயுன்பதத் துணைக்கே. (46)

நீராளமாகியென்னெஞ்சமங்தேநினைநேர்துதிக்கத்
தாராளமாகப்படைக்காதடுதென்றன்றவக்குறையோ
போராடுநெஞ்சமென்னோடிந்தவேளைப்பொருந்திநின்றால்
வாராதவளல்லவேவடிவேகன்னிவாழ்பவளே. (47)

பமரநிகர்த்தகண்மாதர்களல்குற்படுகுழியின்
மமதைகொண்டேயங்குமன்மதன்காட்டவழுவிவிழச்
சமர்செயுந்தத்துவச்சேற்றிலுளன்றுதவிக்கின்றனன்
அமலனிடத்திற்குடிகொண்டுவையங்களாள்பவளே. (48)

கஞ்சனுங்கஞ்சமலர்தனில்வாழுங்கலைமகளும்
பிஞ்சகனுங்கதிர்வேலனுங்காளியும்போலையிற்
றுஞ்சுமிலக்குமிநாயகனோடிவர்சுற்றமெலாம்
அஞ்சலிசெய்துதுதித்தேத்துங்கன்னியிலாண்டவளே.

ஆரியொழுகுசெந்தாமரைநேர்நின்னரும்பதத்தில்
மாரிபொழிவதுபோலேமலரள்ளிவாழ்த்தியிடுங்
காரிக்கருள்சுரந்தேபலதேவரைக்காக்கவைத்த
நாரியுனைக்கண்டுநான்றொழுவோராருணல் றவையே. (50)

ஓசையொளியெனுநாற்றத்துளூறியங்குற்றசுவை
ஆசைதனையொழித்தானந்தங்காட்டும்மரும்பொருளே
வேசையுறவும்வினைதப்பெருக்கையும்விட்டுனடிப்
பூசைபுரியவரமருள்வாய்வனப்பொற்கொடியே. (51)

வன்னியென்றென்னைவகுத்திடுங்கோலபரபதெனு
நன்னிலைதன்னிலிருக்காதுகைவிடுஞாயமென்னே
சென்னியிலேபொதிரோமமுங்காடிச்சிறப்புமிக
என்னிடங்கண்டதல்லாதேதுறவுக்கிங்கேதுரையே. (52)

உரைக்குமிநவினைக்கானலிலேசிக்கியுன்னைமறந்
திரைக்குமலையிற்றரும்பெனவிங்கடியேன்றவித்து
நுரைக்குச்சமதையதாகுமித்தூலநொறுங்கிவிடிற்
றரைக்குளெவர்களிருப்பினுமென்செயச்சாம்பவியே (53)

செய்யும்பவங்கண்மிகப்புரிந்தேயுன்றிருவுருவை
வையகந்தன்னிலறியாதுநின்னைவணங்கிநின்று
ணையுஞ்சுதனுட்குறிப்பையறிந்தருணல்கிலையேல்
உய்யும்படிக்கொருதஞ்சமுண்டோகடிதோதுவையே.

ஓயாக்கவலைகட்குள்ளென்மனத்தையுமூட்டுவித்து
மாயாவிகாரசம்சாரத்தழலினில்வாட்டுவதேன்
நாயேற்கொருகதிவேறுளதோவிந்தநானிலத்திற்
றாயேதயாபரிசாம்பவியுன்னெழிற்றாளருளே. (55)

அருளிற்பழுத்தசுகவாரியாகியவானந்தத்தேன்
உருகாதெடுத்தென்னுளூட்டுவித்தேயென்றனுள்பவத்தீன்
சருகேயெடுத்துத்தணலினிற்போட்டுத்தமியன்மன
மருளேதவிர்த்திணைத்தாண்மலர்காட்டிடுன்மைந்தனுக்கே. (56)

மைந்தரெல்லாருஞ்சமமாவரென்னமறைமொழிய
இந்தவுலகிலெனைவினைச்சேற்றிலிருத்துவதேன்
அந்தமுதலின்றியானந்தக்குன்றிலமர்ந்திருந்த
சுந்தரியுன்பதந்தந்தருள்வாய்நற்சுகவமுதே. (57)

கண்டகாரகுமாக்கர்குலத்தைக்கடிதறுத்தவ்
வண்டாரிருப்பையடையாதுசெய்தவருமறைச்சி
பிண்டமதனிலுனதுருக்காட்டிப்பிரமசபை
முண்டகந்தன்னிலமர்ந்தவக்கோலமென்முன்னிற்கவே

முன்னமியான்செய்வினையோடவென்குறைமுற்றுதற்கே
அன்னையுனைப்பலகாலமும்போற்றியருச்சிப்பதக்
கன்னங்கருநிறக்காலனென்மேலொருகைசுழற்றில்
உன்னைநினைக்கும்படியாயருடனையூட்டுவையே. (59)

ஊனாயவ்வூனிலுயிராயுலகத்திலொன்றிரண்டாய்
நானாகநின்றவந்நாதமுமாய்மன்னுநற்சுடராய்
வானாயவ்வானில்வளர்பலதேவெனவாழ்ந்ததற்குக்
கோனாகிநின்றகுமரியந்தத்தினிற்கோமளமே. (60)

அந்தமுதலுருவாயதன்மையத்தமர்ந்திருந்தென்
றந்தையுந்தாயுமெனமறைபோற்றுநற்சற்குருவாய்ச்
சிந்தைசெய்வாரறிவுக்கறிவாகித்திகழ்சமயக்
கொந்தம்பலவிதமாகநின்றோங்குந்துகளிலன்பே. (61)

அன்புப்பெருக்கெனப்பார்த்ததிக்கெங்குமதுவதுவாய்
இன்பநிறைந்தகதிர்மதிவன்னியெனப்புகலும்
மின்பலவாய்விளங்கம்பிகையே பாவவிமோசனியே
என்பவமோட்டுகயோகர்களுள்ளத்தெழும்பதியே. (62)

பதியாகியப்பதிக்குட்பஞ்சவன்னம்பரவிநின்ற
விதியாய்விதிக்கங்குறைவிடமாகிவிஞ்ஞானமுமாய்ப்
புதிதாமகோசரத்தாதாரபீடப்புணப்புமதாய்
மதியானமும்மண்டலத்துக்குமேலுளவாசகியே. (63)

வாசனையாகியமாயாவிகாரவழியமர்ந்த
தேசமுமாயந்தத்தேசத்திலக்வைதசேர்வையதாய்ப்
பாசமுமாயங்கப்பாசத்தையோட்டப்பருதியுமாய்
ஈசனுமாயங்கிறைவியுமாகியெழுந்தவொன்றே. (64)

ஒன்றேயெனக்குள்ளுதித்திடுஞானவுகயமெனுங்
குன்றேவளைகடற்குள்ளேயுதித்தகுவலயமே
நன்றேபசுபதிபாசமுமாகிநடுவிருந்து
சென்றேயடையுந்திரிபுரையாதிசெழும்விளக்கே. (65)

விரைமலர்க்காளடியேன்முடிமேல்வைத்தென்வெவ்
வினையின், கரையொழித்தானந்தமாதவத்தேனென்கடத்
தினுள்ளே, பரைதிரிசூலிநிறையவைத்தாண்டருள்பைர
வியே, புரையற்றபூரணப்பொன்னுடர்போற்றும்புரா
தனியே. (66)

ஏனத்தைப்போன்றவுடலைப்படைத்ததிலென்னபயன்
மோனத்துக்கேற்றவழிபயிலாதுமொழிவதெல்லாங்
கானற்கெறித்தநிலவதுபோன்றகதையலவோ
ஞானத்துக்கேய்ந்தவழிதரவெங்குநடிப்பவளே. (67)

பச்சைவடமும்பவளவிதழுநின்பாதசரக்
கெச்சத்தொனியுங்கிரீடமுடியுமங்கெண்டைவிழி
கச்சையணிந்திடுமார்பழகோடுன்றன்காதினிலே
வச்சிரமுற்றிடுந்தோட்டழகோடிங்குவந்தருளே. (68)

அரையினிற்செம்பட்டுடுத்தியகோலமுமங்கையினில்
வரைகொண்டமாடகவீணையுமேந்திநன்மாதவர்கள்
புரைதவிர்த்தோட்டிடுமங்குசபாசம்பொருந்திடச்சிற்
பரைபஞ்சபாணிபயிரவியாயிகண்பார்த்தருளே. (69)

அற்பவுடலிதழிவதன்முன்வந்தருள்சுரந்து
சிற்பரமாகுஞ்சிதம்பரத்தேநின்றிருநடனப்
பொற்பதங்காட்டியங்குற்றசுகத்திற்பொருந்திடவுங்
கற்புரந்திப்பட்டகாரணம்போலுங்கலந்தருளே. (70)

கலைமதிசேருஞ்சடைமுடியோடிருகாதுகளில்
விலைமதியாதபொன்னோலையுநெற்றியின்மின்னுசரா
நிலையழகோடுபரிமளமாலைநிறைந்திருக்குந்
தலையழகோடுவந்தாண்டருளன்புதழைப்பதற்கே. (71)

அழகுக்கொருவரையீடுசொல்லவோமெனவாய்ந்திடலுன்
நிழலுக்குரியநிலைமையுங்காண்கிலனீணிலத்திற்
குழவிக்கிணையெனுநாயேனருந்துயர்கூறினும்பொற்
கழலைமனத்திலிருத்தித்திருத்திடக்காண்கிலனே. (72)

காற்றடிதாலுங்கலங்கிடுமேனியைக்கண்டம்புலச்
சேற்றினுளேந்துதவிக்கவிட்டாய்ஜெகதீஸ்வரியே
ஊற்றுப்பெறுக்கெனுஞானநதிவெள்ளத்திலோடிவரும்
பாற்றுக்கமின்றிக்குடித்திடநல்லருள்பாலிப்பையே. (73)

பாகமுடன்றலைக்கெண்ணெயிட்டேபலபண்டமிட்டித்
தேகந்தனைவளர்த்தாலினியாவதுன்சிறடிக்கோ
போகத்தினுலெமன்கைக்கிரையோவெம்புழுக்கிரையோ
காகந்தனக்கிரையோகன்னியேயேதுங்கண்டிலனே. (74)

ஓடியலைந்துபாதவியாதுன்னுபயபதஞ்
சூடியென்னுள்ளத்தமர்ந்தேமனத்தைபுஞ்சுத்திசெய்து
நாடிகண்முற்றிலும்வந்தேயடங்குநடுவணைகண்
மூடியுனைக்கண்டுசேவிக்கச்செய்சிலமூலத்திலே. (75)

மூலக்கறனைமும்மண்டலத்தினுமூட்டியருட்
பாலைக்கறந்துபசியாரிநின்றன்பதத்தினுக்கே
சாலநறுமலரிட்டுனைக்கண்டுசரண்புகுந்தேன்
காலன்பயமொழித்தாண்டருளாபெழிற்கன்னிகையே.

ஆணிப்பொன்னம்பலத்தேயருளாட்டத்தழகுகண்டால்
வாணியக்குரியநற்றேவனும்மாயனும்வாசவனும்
நாணிக்கவிழ்குவரன்றியன்றோரானலனுள்ளதென்
பாணிப்பெருக்கெனுங்கன்னியில்வாழும்பகவதியே. (77)

வாராயடியன்முன்வந்தொருக்காலுன்மலர்ப்பதத்தைத்
தாராயெனக்கினிநின்பதமேதுணைதஞ்சமன்றி
ஊரார்துணையிலையுள்ளிருந்தோங்குமுயர்மனமுஞ்
சீராயுருகவுமில்லைத்திரிபுரந்தீர்த்தவளே. (78)

இல்லாதமாயையெனும்பெருங்கானலிலென்னைமட்டும்
பொல்லாதபாவியெனநினைந்தோதள்ளிப்போனவிதங்
கல்லாதபேர்க்குந்தெரிந்திடுமேயென்றன்கன்மனத்தைச்
சொல்லாற்றிருத்திச்சுகந்தனையீந்தருள்சுந்தரியே. (79)

ஈடெனக்காரென்றிறுமாந்துநிற்கின்றவென்மனத்திற்
பாடகந்தண்டைசிலம்புகள்கொஞ்சிப்பாவிடுநின்
றாடனைவைத்திவ்வடியேனையாளித்தாதலத்திற்
சேடன்மிசைத்துயின்மாறங்கையானசிவக்கொழுந்தே(80)

சிவக்கொழுந்தேமும்மலமாய்கைசன்னிற்றினமுழலும்
பவத்தைத்தொலைத்துன்பதந்தனைமேவிடப்பார்த்தருள்வாய்
தவத்தைக்கெடுக்குமடமாதர்பாலெனைத்தள்ளிவிடில்,
அவத்தைக்குள்ளாய்விடுவேனருள்பாலித்தருளம்மையே.

அம்மையுருத்திரியானந்தத்தாண்டவியாலிலைமேற்
செம்மையுடன்றுயின்மாயோன்சகோதரிசீலியெழிற்
கொம்மைமுலைச்சியெனவேசுரர்கள்குழாங்களெலாஞ்
சும்மைமலர்கொடுபூசிக்கநல்லருள்சொல்பவளே. (82)

சொல்லும்பெருவெளிமூலநடுவணைத்தோற்றத்துளே
அல்லும்பகலுநல்லானந்தமாகியமர்ந்துநின்று
வல்லபமாகியமாபுலச்சாரிமயக்கொழித்தங்
கெல்லாவுலகமும்போற்றவுவந்தருளென்னம்மையே. (83)

உவக்குமடியவர்நற்கதிசேரவுனதடியைப்
பவக்கடலேறமரக்கலமாகப்பரிந்தருளித்
துவர்க்கிணையாம்பவளவாய்திறந்துதுணிவுசொலுஞ்
சிவக்கொழுந்தேயுன்றிருவடியென்றுமென்சிந்தையதே.

எண்ணாதவெண்ணங்களெத்தனையோவெண்ணியெ
ன்மனந்தான், புண்ணாயிராநின்றதாரணியேபரிபூரணியே,
மண்ணோடுபெண்ணுந்தனமெனுமாயைவலையில்விட்டுக்,
கண்ணாலுமேரிட்டுப்பாராதகோலமென்காரணியே. (85)

காணாதகாட்சியதாகுமுன்சேவையைக்கண்டெழில்சேர்
பூணார்ந்திலங்குமுன்பாதத்தைப்பூசித்துப்போற்றமதி
கோணாதுசெய்தெனுயிர்க்குயிராகிக்குறிப்பதனில்
நாணாதுநின்றருணனேநீயாகியநற்றவமே. (86)

தவமற்றபாவிசற்சனமற்றுமாயையிற்றானழுந்திச்
செவமற்றுனதிருவடிக்காட்சியைச்சேவிப்பனோ
பவனப்பெருக்கினிற்காவலர்போற்றிடும்பைங்கிளியே
நவமற்றபாதகனையுநின்னருணல்குவையே. (87)

நற்பதிசேர்ந்திடுஞ்சித்தருமுத்தருநானிலத்திற்
பற்பலபேறும்பரமெனவுன்னைப்பணியவருள்
சிற்பரையேபரமானந்தியேயிந்தச்சென்மமதைக்
கற்பகத்தாருவிலேயமைத்தேயருள்காட்டுகவே. (88)

அன்னநடையெனுமின்னரசேநின்னடிக்கமலந்
தன்னையடியனுளத்திலமைத்தென்றவமுடிப்பாய்
வன்னவுடைமுடிவால்வலயத்துடன்மார்பிலணி
முன்னைமலருநன்மூக்குத்தியோடுமென்முன்வரவே.

வற்றாதருளியமைதீட்டுமங்கயற்கண்ணிவளம்
சற்றாகிலுங்கண்டுசேவிக்கிலோதகுமூவுலகும்
பெற்றாயெனச்சொலிப்போற்றிடுமுன்றன்பெருமைமிகும்
பொற்றாமரைப்பதமீவதற்கையமென்பூரணியே. (90)

ஐயோபுவியரசாயினுமையம்ருந்திடனும்
பொய்யானமாய்கையிற்சிக்கியபோதினும்புண்ணியனுய்
வெய்யோனைக்கண்டுவினையையெறித்தங்குவீற்றிடினும்
மெய்யானதேவிநின்பாதம்விட்டலென்வியப்பதுவே.(91)

பங்கப்படுத்திப்பவச்சேற்றிலேவிடும்பாவையர்தங்
கொங்கைகளாகுமிருவனைக்குன்றினிக்கூட்டுவதேன்
தங்கத்திருவடிபூண்டவரேயெழில்தங்கிவரும்
அங்கத்தரசியபிராமிவாலையழகியளே. (92)

அய்யோவுலகிலெனக்கினியாரிருந்தாவதென்ன
மெய்யும்பொய்யாகியிம்மேதினிதன்னில்விழுகையினில்
கையாலெடுத்தணைத்தாநந்தத்தேன்கனிவாயிலிட்டு
மையல்தனைத்தவிர்தேயருள்கூட்டவருகுவையே.

வஞ்சியர்செய்கின்றமாயத்தைப்பார்த்தென்மனம்பதறி
அஞ்சியுனதுபதம்பணிந்தேனதுதீரவென்றே
செஞ்சிலம்பாடிச்செழித்துவளருன்றிருப்பதமென்
நெஞ்சினிலேகுடிகொண்டோங்கிடவந்துநிற்பவளே.

நில்லாவுடலுநிலைநிற்குமோநின்னருளன்றியே
சொல்லாற்பெருகியகற்பங்களுண்டுசொலித்திடினும்
பொல்லாதபாதகனுகியவேமன்பொருந்துகையில்
வல்லாண்மைகெட்டவன்பாசக்கயிற்றின்மடங்குவரோ

மட்டிப்பசாசெனுமைம்புலப்பாவியைவாட்டியடி
யெட்டிப்பிடித்தங்கிருங்கதிரோடுமிசைத்தறிவைத்
தட்டிக்கொடுத்துச்சமரசத்தேகிச்சங்கற்பமற்றால்
அட்டிசெயேமனவரைக்கண்டோடியடங்குவனே. (96)

அருளேநிறைந்தநல்லானந்தபோதவரிதங்கையே
பொருளேவிரும்பியலைந்துதிரியுமென்புன்மனத்தின்
மருளேயொழித்துயர்வாசியிலேறிமயக்கவரும்
இருளேதவிர்த்தநன்ஞானிகள்பாலிலிருக்துமினே.

மித்தையதாகுமித்துலத்தைநம்பியிம்மேதினியில்
மெத்தையின்மேலொருமெத்தைவைத்தேமிகமேவிடுவார்
பத்திரமேந்தியபாதகனுமெமன்பாசம்வரி
னெத்தைத்துணைக்கொண்டவன்றனைநீக்கியிருப்பதுவே.

பத்திசெய்கன்னிப்பகவதிமாலைப்படித்துமனம்
சுத்திசெய்தானந்தத்தேனமதூறிடும்சொற்புருவ
மத்தியிற்சோதிமலர்த்தாழ்நடுவில்மனத்தைவைத்தால்
சத்தியமாகவருவாணம்மாதாரசங்கரியே. (99)

ஆதாரமாறிரண்டிற்குமப்பானிற்குமாதிபரை
பாதாரவிந்தந்துதிப்போர்கள்வாழியுட்பற்றதனை
வாதாடிவென்றவருட்சித்தர்வாழியவாழியிந்நூல்
காதாரக்கேட்குமபிராமவல்லியாங்கன்னிகையே. (100)

திருவருட்சகாயம்.

பகவதியந்தாதிமாலை முற்றிற்று.

திருவருட் சகாயம்.

திருக்குருகூர்ச் சித்தமூர்த்திகள் திருவாய்மலர்ந்தருளிய

நூல்களின்பெயர்.

நெம்பர்.	நூல்களின் பெயர்.		செய்யுள் மொத்தம்.
	சாத்திரக்கோவைகள்.		
1	கலைக்ஞானதீபம்	...	1000
2	சுத்தாத்துவித சித்தாந்தபூஷணம்	...	1000
3	மஹாமூலிகாமர்மம்	...	1000
4	ஆயுர்வேதரத்திநச்சுருக்கம்	...	500
5	சித்தசாத்திரச்செய்யுட்டிரட்டு	...	300
6	சடாதாரவிளக்கமென்னும் திருமந்திரம்	...	200
7	தபோதனம்	...	105
8	உத்தரபோதசங்கிரகம்	...	100
9	வைத்தியக்கும்மி	...	100
10	முப்பூவிளக்கமும்மணிக்கோவை	...	30
11	சுத்தசலத்தெளிவெட்டு	...	8
12	விஷஜ்வரநிக்ரக பஞ்சரத்நம்	...	5
	க்ஷேத்திரக் கோவைகள்.		
1	ஞானபாஸ்கரோதயம்	...	1000
2	திருக்குற்றாலப்பதிகம்	...	30
3	திருமலைப்பதிகம்	...	30
4	அகத்தியாகவல்	...	1
5	சித்தர்கள்பாமாலை	...	42
6	பாபநாசப்பதிகம்	...	30
7	கன்னியாகுமரிப்பகவதியந்தாதி	...	100
8	திருச்செந்திற்பதிகம்	...	30

நெம்பர்.	நூல்களின் பெயர்.		செய்யுள் மொத்தம்.
9	ஆற்றூர்ப்பதிகம்	...	20
10	சோமசுந்தரிமாலை	...	30
11	கூடுதுறை	...	100
12	காந்தீஸ்வரப்பதிகம்	...	30
13	திருக்குருகூர்நவதிருப்பதிமஞ்சரி	...	100
14	திருவுருமாமலைப்பதிகம்	...	30
15	திருநெல்வேலிப்பதிகம்	...	20
16	காந்திமதியம்மன் காட்சிப்பதிகம்	...	10
17	செப்பறைப்பதிகம்	...	10
18	சதுரகிரிமஹாலிங்கர்பதிகம்	...	10
19	திருப்பரங்குன்றப்பதிகம்	...	30
20	மதுரைமீனாம்பிகைமாலை	...	32
21	இராமேஸ்வரப்பதிகம்	...	30
22	உத்தரகோசமங்கைப்பதிகம்	...	10
23	பழனியாண்டவர்மாலை	...	30
24	சுருளிமலைப்பதிகம்	...	10
25	வெள்ளியங் கிரிப்பதிகம்	...	10
26	மருதமலைப்பதிகம்	...	30
27	கோயமுத்தூர்க் கோட்டைக்குகன்பதிகம்	...	10
28	பட்டீசுரப்பதிகம்	...	30
29	அவிநாசிப்பதிகம்	...	30
30	திருச்சிராப்பள்ளிப்பதிகம்	...	40
31	திருவானைக்காப்பதிகம்	...	10
32	அகிலாண்டேஸ்வரிமாலை	...	30
33	பச்சமலைச் சற்குருபாமாலை	...	30
34	திருப்பிடவூர்ப்பதிகம்	...	100
35	திருவரங்கத் திருமாலை	...	64
36	கடம்பர் கோயிற்பதிகம்	...	20
37	இரத்நகிரிப்பதிகம்	...	20
38	திருவீங்கோய் மலைப்பதிகம்	...	20
39	கருவூர்ப்பதிகம்	...	30

தொம் பர்.	நூல்களின் பெயர்.		செய்யுள் மொத்தம்.
40	இளம்பள்ளிஸ்தலப்பதிகம்	...	140
41	திருச்செங்கோட்டுப்பதிகம்	...	100
42	நாரிக்கணபதிமாலை	...	30
43	குமரமங்கலப்பதிகம்	...	100
44	சேலப்பதிகம்	...	40
45	பாகநகர்ப்பதிகம்	...	20
46	காங்கேயப்பதிகம்	...	30
47	சிவன்மலைப்பதிகம்	...	10
48	திருவனந்தகிரிப்பதிகம்	...	10
49	பச்சைமலைப் பரமசற்குருபிரசாதமலை	...	30
50	கொல்லிமலைப்பதிகம்	...	10
51	திருவொற்றியூர்ப்பதிகம்	...	30
52	திருவிற்கோலப்பதிகம்	...	30
53	திருவாலங்காட்டுப்பதிகம்	...	20
54	திருமணவூர்ப்பதிகம்	...	20
55	சாமளவல்லியார்பதிகம்	...	20
56	வடதிருமுல்லைவாயிற்பதிகம்	...	30
57	சென்னைக்காசிவிசுவநாதர்பதிகம்	...	20
58	ஷை கமலவிநாயகர்மாலை	...	32
59	ஷை தில்லைவிநாயகர்பதிகம்	...	10
60	ஷை கங்காதரேசுவரர்பதிகம்	...	10
61	ஷை சித்திவிநாயகர்பதிகம்	...	10
62	பாலசுப்பிரமணியர்பதிகம்	...	10
63	திருக்கழுக்குன்றப்பதிகம்	...	30
64	திருவான்மியூர்ப்பதிகம்	...	20
65	திருமயிலாப்பூர்ப்பதிகம்	...	40
66	பாதிராப்புலியூர்ப்பதிகம்	...	20
67	கந்தகோட்டமாலை	...	100
68	வடபழநித்தாண்டகமாலை	...	20
69	காஞ்சிகாமகோடிபீட நவரத்னமாலை	...	9
70	திருவண்ணமலைப்பதிகம்	...	30
71	சிற்சபைப்பதிகம்	...	30

நெம்பர்.	நூல்களின் பெயர்.		செய்யுள் மொத்தம்.
72	வைத்தீஸ்வரர்பதிகம்	...	20
73	பிரமபுரப்பதிகம்	...	20
74	சட்டநாதர் பஞ்சரத்நக்கவசம்	...	5
75	திருமாற்பேறுப்பதிகம்	...	20
76	மாயூரநாதர்பதிகம்	...	10
77	கும்பகோணம் மாமகப்பதிகம்	...	10
78	திருவையாறு சப்தஸ்தானப்பதிகம்	...	10
79	திருநள்ளாற்றுப்பதிகம்	...	10
80	திருமாகாளப்பதிகம்	...	10
81	திருவம்பர்ப்பதிகம்	...	10
82	திருப்பழூர்ப்பதிகம்	...	10
83	திருவிதாங்கோட்டுப்பதிகம்	...	10
84	கதிர்காமவேலர்பதிகம்	...	10
85	திருவிரும்பைமாகாளப்பதிகம்	...	10
86	ஞானாம்பிகைப்பதிகம்	...	10
87	திருவாசிலிப்பதிகம்	...	10
88	வில்வாரண்ணியப்பதிகம்	...	20
89	முருகன்பார்க்கப்பதிகம்	...	2
90	வேதபுரிப்பதிகம்	...	20
91	திரிபுரசுந்தரிமாலை	...	30

அச்சிட்டோ னிவனுறென்று லருட்குருவாத்மசீடன்
பச்சமாய்க் குலசைமேவும் பதிப்பிடபாகமுற்று
இச்சைகொண் டாழ்குந்தர்ம மிணையடிக்கன்பர்செல்வம்
நிச்சயமாகக்கொண்டே நிலம்வாழ்கப் பதிப்பிட்டேனே.

திருவருட்சகாயம்.

உ

திருவருட்சகாயம்.

ஸ்ரீ புவனும்பிகா

ஞானசித்தாலயம்.

பரமதயாநிதியாகிய பதினெண் நாயன்மார்களின் பாதம் வணங்கும் திருக்குருகூர்க்கோமான் ஸ்ரீமத் ஞானசித்த சுவாமிகள் தானவதரித்த திருக்குருகூரிலே சித்தாலயம் ஸ்தாபிக்க திருவுளங்கூர்ந்த பெருங்கருணையை அடிமையாகிய சிறுவன் மனத்தின்கண் குறித்து எனது பரிபக்குவக்குறிப்பிற்குரியவாறு அனுதிமுத்தனுகிய முதல்வனது தாதான்மிய சத்தியாகிய ஸ்ரீ புவனும்பிகாவென்னும் திருநாமத்தையுணர்ந்து அர்சித்து வழிபடுவோர் சித்தரும், முத்தரும், தொண்டருமேயன்றி, மற்றவாறியார். இக்கலியுலகிற் திருக்குருகூர் கோமான் நம் தமிழ்நாடனைத்தும் அம்பிகையின் திருநாம அருட்ஜோதியை பிரகாசிக்கும்படி செய்தருளினர். அன்றியும், என் நெஞ்சகத்தும் அமர்ந்தருளச்செய்தனர். அவ்வாறே யெனது ஆத்மார்த்த வுபாஜன மூர்த்தியாயெழுந்தருளி வழிபடும் அம்பிகையை ஸ்ரீ ஆறுமுகப் பெருமான்முன் குருநாதன் ஸ்ரீமத் ஞானசித்த மூர்த்திகள் திருக்குருகூரிலே அவதாரஞ்செய்ய அனுக்கிரகித்த திவ்யக்ஷேத்திரமாகிய திருச்செந்தூரிலே அவனருளாலே ஸ்ரீ புவனும்பிகா ஞானசித்தாலயமொன்று ஸ்தாபித்து சர்வகோடி பக்தவான்மாக்களும் கண்டு தெரிசித்து வழிபட்டுய்யுமாறு ஸ்ரீ புவனேஸ்வரியை எழுந்தருளச் செய்வித்தும், வேதபுரி க்ஷேத்திரத்திற் சமாதி கொண்ட நாதன் ஸ்ரீமத் ஞானசித்த மூர்த்திகளையும் சிவலிங்கமுகூர்த்தமா யெழுந்தருளச்செய்வித்தும் இத்துடன் சுவாமிகள் திருவாய்மலர்ந்தருளிய சாஸ்திரங்களையும் பதிப்

பிட்டு ஸ்தாபிக்கவும், அன்றி ஸ்ரீ புவனும்பிகா பக்தஜன ஞானசித்தசபை கூட்டவும், ஞானசித்த வைத்தியசாலை, அன்னதானமடம் முதலிய தர்மகைங்கரியங்களை நடத்தவும், அன்புகொண்டு தர்க்காலம் 3-வருடமாக ஸ்தாபித்து வருகின்றேன். ஆதலால் சற்சமய விளக்கஞ்செய்யும் இவ்வரிய திருப்பணிக்கு சகல பக்த அன்பர்கள் யாவரும் தம்தம்மாலியன்ற பொருளுதவி புரிந்து இகபர சாதன இன்பமுற்று வாழ்கத் திருவருளைத் தியானிக்கின்றேன்.

இந்நூலாசிரியர் சகோதரி குமாரரும், ஆத்ம சீடனுமாகிய

குலசேகரன்பட்டணம் சங்கரன்,

ஆயுர்வேதபண்டிதம்,

ஸ்ரீ புவனும்பிகா ஞானசித்தாலயத் திருப்பணித்தலைவர்,

திருச்செந்தூர்.

இப்புத்தகம் கிடைக்குமிடம்:—

ஸ்ரீ புவனும்பிகா

பக்தஜன ஞானசித்த சபையார்,

ப. அ. கந்தசுவாமியாபிள்ளை, குலசேகரன்பட்டணம்,

திருநெல்வேலி ஜில்லா.

வி. ருமசாமியாபிள்ளை, மேலப்பாளையம் குறிச்சி,

ஷை ஜில்லா.

மேல்கண்ட சபையாரிடமும், இப்பணிக்குரிய தர்மத்தை செலுத்திக்கொள்ளவும் வேண்டிக்கொள்கின்றேன்.

குலசேகரன்பட்டணம் சங்கரன்,

ஸ்ரீ புவனும்பிகா ஞானசித்தாலயத் திருப்பணித்தலைவர்,

திருச்செந்தூர்.

உ

திருக்குருகூர்
சித்தராலய தர்ம அறிக்கை.

திருக்குருகூர் ஸ்ரீமத் - ஞானசித்தமூர்த்திகள் உத்தமபாளையம் சென்றபோது, அந்நகரில் சாத்திரம் பல வாய்ந்தவரும், திருவருளை நாடிக்கொண்டிருப்பவருமாகிய மக்கமீருலெவ்வை ராவுத்தர் என்பவர் சித்தமூர்த்தியினைத் தரிசித்து, அவர்பால்வாய்ந்த அற்புத மகிமைகளைக்கண்டு முறையினால் வணங்கி அடிமையினை யாண்டு கொள்ளவந்த அப்பனே! நான் தனித்துவாழும் கடமலைக்குண்டுக் கெழுந்தருளவேண்டுமென விஞ்ஞாபனஞ் செய்து, அழைத்துக்கொண்டுபோய் ஓர் ஆசிரமத்திலிருக்கச்செய்து, தாம் படித்திட்ட அங்கயோகம், முப்பூ கற்பமாதியவற்றி னேர்ந்திருந்த சந்தேகங்களை நீக்கிக் கொண்டு உண்மை தேறச் சித்தசுவாமிகள் அவ்விராவுத்தர் பொருட்டு கலைஞான தீபம் 1000-என ஒரு நூல் இயற்றியனர். மீருலெவ்வை தனது உடல், பொருள் ஆவி மூன்றினையும் சித்தர் முன் அர்ப்பணஞ்செய்து மயிலாடுபாறைக்குச் சமீபத்திலுள்ள நரசிங்கபுரம், கடம்பன்குளம் நஞ்சை நூறு ஏக்கருநிலங்களையும் சித்தராலயத்திற்க்கெனக் கொடுத்து விகிர்தி வருஷம் கார்த்திகை மாதம் 3-ம்தேதி சித்தர் பெயரால் பத்திரம் முடித்துக்கொடுத்திருக்கின்றனர்.

பிழை திருத்தம்.

பக்கம்	செய்யுள்	வரி	பிழை	திருத்தம்
2	2	2	மின்ற	மீன்ற
2	4	2	யுலகேழு	யுலகேழுக்கு
,,	5	1	பனக்	பவனக்
3	12	3	தெறிசனை	தெரிசனை
4	19	3	தர்பரனுர்	தற்பரனுர்
6	31	2	பதைர்	பதைத்
,,	34	2	கொன்னு	கொனு
7	41	1	வெளி	வெழி
8	42	2	வே	வை
,,	43	4	றரி	திரு
,,	44	4	லரு	லறு
,,	47	1	கீரான	கீராழ
9	51	2	காட்டும்	காட்டு
10	56	2	தீன்	தின்
12	73	1	டம்புலச்	டைம்புலச்
,,	76	,,	கறனை	கனறனை
13	82	3	மூலச்சி	மூலைச்சி
14	87	3	பைங்கியே	பைங்கிளியே
,,	88	2	பேறும்	பேரும்
15	92	2	மிருவனை	மிருவினை
20	1	2	பதிப்பிட	பதியிடப்
தர்ம	அறிக்	கையில்	இயற்றியனர்	இயற்றியருளினர்
கவரி	ல் ,,	1	குவலத்தே	குவலயத்தே
	,,	2	மியற்றிய	மியற்றி
			சுத்தசைவாசிரிய	சுத்தசைவாசாரிய

பக்கம்	செய்யுள்	வரி	திருத்தம்
2	3	2	போதித்த
3	9	1	திடு
4	16	2	தத்துவர்
,,	,,	3	திருந்த
,,	17	2	மதித்ததனுல்
5	21	3	சித்த
,,	23	1	சுழுத்திப்பதி
,,	24	2	தன்னைச்செய்யத்
,,	26	1	யிந்தத்
6	28	3	பகவதி
,,	29	1	மிதா
,,	,,	3	சித்தமும்
,,	30	3	ததும்பிச்
,,	31	2	தத்துவர்
,,	34	1	திருவடி
8	43	2	விந்தத்
9	51	3	விஞேதப்
,,	52	2	விருத்தாது
,,	,,	3	தாடிச்
11	64	2	யிந்தத்தேசத்திலத்வைத
,,	,,	3	யிந்தப்பாசத்தை
,,	65	1	ளுதித்திடு ஞானவுதவ
,,	,,	2	யுதித்த
,,	66	1	தாளடி
,,	,,	3	கெறித்த கதையலவோ
13	78	2	பதமே
,,	,,	3	திடுமே
,,	,,	3	மாதர்
14	86	1	தாகு
,,	,,	2	பாதத்தை
,,	,,	2	திருவடி

இம்மரபினர் சமாதி ஸ்தலங்கள்.

திருக்குருகூர் : ஸ்ரீமத் - ஞானசித்தமூர்த்திகள்,
வைகாசி-மீ விசாகம், வேதபுரிச்க்ஷேத்திரம்.

சுவாமிகள் தந்தை : முத்தீஸ்வரர்,
திருவானைக்காவல்.

சுவாமிகள் மாதாமகர் : முத்துசுவாமியாபிள்ளை,
குலசேகரன்பட்டணம்.

குலசைநகர் : சங்கரன் தந்தை இருளப்பபிள்ளை,
ஆவணி-மீ விசாகம், திருச்செந்தூர்.

குகனருள்முன் குருநாதன் குவலத்தே ஜெனனமுற
இகமதனிற் றந்தைதவ மியற்றிய முத்துசாமியன்பர்
சுகமகவிற் கருள்புரிந்த ஜோதியமர் தலமதனுர்
வகைபெறக் காரணமிதுவா வந்தமர்தலரிவோமே (1)

வேதத்திலமர்ந்த ஞானம் விளங்கிடக் குகனேமூலம்
சாதனமாக வென்றுஞ் சமைந்தநற் பணியைக்கண்டு
போதமா யெவருங்காணப் பொருந்திய ஞானசித்தக்
காதலைக் கொண்டுமாந்தர் கருணைபெற் றுய்யுஞ்செந்தில். (2)

முதற்பதிப்பு விஜய-வரு கார்த்திகை-மீ

வேளான்குலத்தவரும் சுத்தசைவாசிரிய பரம்பரையாரு
மாகிய காஞ்சீபுரம்

சேனாதிபதிதேசிகர் குமாரர்
சிங்காரவேலுதேசிகர் அவர்களால்

இயற்றப்பட்டது.

ஸ்ரீ கான வித்யா பிரஸ், ஸ்ரீவைகுண்டம்:—8/1936.